# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -07 | குடியுரிமைக் கல்வி | நேரம் : 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ **சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

1) சமூகத்தின் முதன்மையான ஆக்க அலகாக அமைவது,
   1. சமூகம் 2. பாடசாலை 3. குடும்பம் 4. ஆலயம்

2) மூன்று தலைமுறைகள் அல்லது அதற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் பலரைக் கொண்ட குடும்ப அலகு எவ்வாறு அழைக்கப்படும்.
   1. தனிக்குடும்பம் 2. விரிந்தகுடும்பம் 3. கருக்குடும்பம் 4. உறவுக் குடும்பம்

3) வெற்றிகரமான வாழ்க்கை வாழ்வதற்காகக் குறிக்கோள்களை உருவாக்கிக் கொள்வதன் முக்கியத்தவம்.
   1. பொருத்தமானவற்றையும் பொருத்தமற்றவையும் இனங்காண முடிவதற்கு,
   2. ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கழிப்பதற்கு
   3. ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தற்கு
   4. பாடசாலை செல்வதற்கு.

Education கல்வி අධ්‍යාපන

4) குற்றங்கள் புரிந்தவரை அடையாளம் காண்பதற்கு நடத்தப்படும் பரிசோதனை.
   1. DNA பரிசோதனை 2. FBC பரிசோதனை
   3. UFR பரிசோதனை 4. TSH பரிசோதனை

5) குடும்ப அங்கத்தவராக இருக்கும் உங்களிடம் விருத்தியடைய வேண்டிய பண்புகளில் ஒன்று.
   1. கடமையை சரிவரச் செய்யாமலிருத்தல்.
   2. மற்றவர்களின் கருத்தக்களுக்கு மதிப்பளித்தல்.
   3. சுயநலனுடன் பணி புரிதல்.
   4. பெற்றோரிடம் சண்டை பிடித்தல்.

6) இஸ்லாமியரின் வழிபாட்டுத் தலமாக அமைவது,
   1. கோயில் 2. விகாரை 3. தேவாலயம் 4. பள்ளிவாசல்

7) சமூக நன்மைக்கு காரணமாக அமையும் நிறுவனங்களில் ஒன்று அல்லாதது,
   1. பாடசாலை 2. குடும்பம்
   3. விளையாட்டு மைதானம் 4. சனசமூக நிலையம்.

8) பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டுக்களுள் ஒன்று.
   1. பல்லாங்குழி 2. சதுரங்கம் 3. மேசைப்பந்து 4. துடுப்பாட்டம்.



kalvi.lk

9) பின்வருவனற்றுள் அழகியல் செயற்பாடு அல்லாதது எது?
1. சித்திரம் வரைதல்
2. முத்திரை சேகரித்தல்
3. நாடகப் பிரதி எழுதுதல்.
4. இசைக்கருவிகள் இசைத்தல்.

10) சமூகத்தில் காணப்படும் பாதகமான சக்திகள்.
1. வீடு
2. பாடசாலை
3. போதைப்பொருள் மதுபானம்
4. நல்ல நூல்கள்

11) விளையாட்டில் தோல்வியை பெற்றுக் கொண்ட மாணவன் வெளிக்காட்டும் மனவெழுச்சிப் பண்பாக அமைவது,
1. கருணை
2. அன்பு
3. கவலை
4. மகிழ்ச்சி

12) உமது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1. தென் மாகாணம்
2. வட மாகாணம்
3. கிழக்கு மாகாணம்
4. வடமேல் மாகாணம்

13) பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்குப் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகளில் ஒன்று.
1. சண்டை பிடித்தல்
2. அழுதல்
3. சிறந்த நூல்களை வாசித்தல்
4. கோபப்படுதல்.

14) குழுவாக வேலை செய்யும் சந்தர்ப்பத்தில் ஒன்று.
1. பூப்பறித்தல்
2. தேங்காய் பறித்தல்
3. சிரமதானம் செய்தல்
4. படம் வரைதல்.

15) கொள்கலன்களில் அடைக்கப்பட்ட பொருள்களை வாங்கும் போது கவனிக் வேண்டியது.
1. விலை
2. நிகரஎடை
3. அடங்கியுள்ள கூறுகள்
4. காலாவதியாகும் திகதி

16) மத வழிபாட்டுத் தலங்களின் அடிப்படை நோக்கம்.
1. நல்வாழ்க்கைக்கு இட்டுச் செல்லல்
2. அறிவினை வழங்கல்
3. அன்பு, அரவணைப்பு வழங்கல்.
4. தவறான வழியில் இட்டுச் செல்லல்.

17) இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு இலங்கை தரநிர்ணய சபையால் வழங்கப்படும் தரச்சான்று.
1. ISO
2. SLS
3. ISBN
4. ISS

18) வாழ்க்கையில் எதிர் கொள்ளப்புடும் அறைகூவல்களில் ஒன்று.
1. அழகியல் செயற்பாடுகளில் ஈடுபடல்.
2. விளையாட்டில் ஈடுபடல்.
3. வேலைப்பளு அதிகரிப்பு.
4. சித்திரம் வரைதல.

19) குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளில் ஒன்று.
1. தலைமைத்துவத்தை மதித்தல்
2. பொதுச் சொத்தை பாதுகாத்தல்.
3. குடும்ப கௌரவத்தைக் காத்தல்.
4. உணவும் போசாக்கும் கிடைத்தல்.

20) உமது தந்தையின் அக்காவின் கணவரை எவ்வாறு அழைப்பர்?
1. சிற்றப்பா
2. பெரியப்பா
3. மாமா
4. தாத்தா

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

01)

1) முதலாம் தவணையில் எமது குடும்பம் எனும் அலகில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகைகள் இரண்டு தருக.
2) கணிப்பீட்டுக்குப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் 3 தருக.
3) இக்கணிப்பீட்டை மேற்கொள்வதற்குத் தகவல்கள் பெற்றுக் கொண்ட வழிகள் இரண்டைக் குறிப்பிடுக.
4) மேற்படி கணப்பீட்டினால் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(12 புள்ளிகள்)

02)

1) சமூகத்தில் காணப்படும் குடும்பங்களின் வகைகள் இரண்டு தருக.
2) விரிந்த குடும்பம் என்றால் என்ன?
3) விரிந்த குடும்பத்தின் சிறப்பு அம்சங்கள் 3 தருக?
4) குடும்பமாக வாழும் போது கிடைக்கும் நன்மைகள் 3 தருக.

(12 புள்ளிகள்)

03)

1) நீர் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ள நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டமிடல் நுட்பமுறைகள் 2 தருக.
2) ஒருவரைத் தனித்துவப்படுத்தும் அடையாளங்கள் 3 ஐக் குறிப்பிடுக.
3) குடும்ப அங்கத்தவர் என்ற முறையில் உங்களுக்குள் விருத்தியடைய வேண்டிய நற்பண்புகள் 3 தருக.
4) உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அவசியமானவையாக விளங்குபவை எவை?

(12 புள்ளிகள்)

04)

1) ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்கும் வழிகள் 3 தருக.
2) சமூக நன்மைக்கு காரணமாக அமையும் நிறுவனங்கள் 3 ஐக் குறிப்பிடுக.
3) விளையாட்டில் ஈடுபடுவதனால் விருத்தியடையும் பண்புகள் 3 தருக.
4) அழகியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக.

(12 புள்ளிகள்)

05)

1) நடைமுறையில் குடும்ப அலகில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் 3 தருக.
2) மனவெழுச்சி என்றால் என்ன?,
3) நீங்கள் மகிழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தும் உணர்வுகள் எவை?
4) பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்திச் கொள்வதற்குப் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் 3 தருக.

(12 புள்ளிகள்)

06)

1) பொதி செய்யப்பட்ட பொருட்களில் காட்டப்படவேண்டிய விபரங்கள் 3 ஐக் குறிப்பிடுக.
2) வேலையொன்றின் மூலம் போதியளவு வருமானம் கிடைப்பதன் பயன்கள் 3 தருக.
3) குடும்பத்தின் மூலம் உமக்கு கிடைக்கும் உரிமைகள் 3 தருக.
4) நற்பிரசை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய பண்புகள் 3 தருக.

(12 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457